# Thiruvalluvar Educational Trust

Improving People's Education

(A non-profitable charity registered (no. 385/05) in Puducherry)
57, Bhavani nagar, Veerampattinam, Puducherry, India-605007.
Ph.: +91-413-2602110 Tele fax: +91-413-2600698
Email: valluvartrust@gmail.com - Web: www.valluvartrust.org


## NEWSPAPER REPORTS ON THE TRUST'S WORKS FOR THE YEAR 2005

## Our Trust inauguration and presentation event in August 2005

### THE NEW INDIAN EXPRESS

Dated: 27.08.2005

# UK aid for Pondy coastal students

By Debjani Dutta

**Pondicherry, Aug 26:** The name of Saffron Walden in Essex in England may not be familiar to those living in the coastal villages of Pondicherry. But the community there is all set to support the educational needs of the wards of fishermen community in the Union Territory with the starting of a trust - Thiruvalluvar Educational Trust.

Since higher education is a difficult thing for students from coastal areas, this English village with a population of about 400 has contributed 3000 pounds (approximately Rs 2 lakh) towards the corpus for the trust.

It all began when Saravanane Poobalane, hailing from a fishermen community from Veerampattinum village, took the initiative for such a project along with nine others from different coastal villages in Pondicherry. For Saravanane, a Ph.D student at University of Stirling, Scotland, the inspiration came from the problems that he had to encounter while raising funds for his education. "I want to do something so that students from the fishing community need not run from pillar to post to raise funds for their education," said Saravanane.

When he was pursuing his dream without knowing how it would materialise, support came from the English village unexpectedly. Saravanane used to visit the village to see one of his Ph.D supervisors Prof Patrick Smith in connection with his project work.

Prof Smith, who was also the Director of Schering-Plough Aquaculture, a company which extended some financial assistance to Saravanane for pursuing his Ph.D, came to know about his dream and so also the entire village.

The people also responded through voluntarily contributions at a party hosted in the village. "We feel happy to contribute for a good cause, especially after seeing the devastation caused by the tsunami on the TV. We want to get associated with these needy people," said Alexander Moffatt, a representative from the village, who had come to Pondicherry for the inauguration of the trust on Monday at Veerampattinam. The association would not end here, but it would grow in future, he said.

The trust initially plans to encourage the children by providing them books, notebooks, school bags, stationery items, and other educational needs.

The toppers in public examinations would be given cash awards. Later, these students would be given funds for higher education. Contributions from voluntary organisations and philanthropists would be solicited to take the mission forward, noted Saravanane.

**DINAMALAR**
Dated: 02.09.2005

## வீராம்பட்டினத்தில் கல்வி அறக்கட்டளை

புதுச்சேரி, செப். 2—

வீராம்பட்டினத்தில் கல்வி அறக்கட்டளைத் துவக்க விழா நடந்தது.

வீராம்பட்டினத்தில் திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை துவக்க விழா மற்றும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி நல உதவி வழங்கும் விழா நடந்தது. சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடந்த விழாவில் 15 கடற்கரையோர கிராமங்களில் இருந்து 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. ஆயிரம், பரிசுப் பொருட்கள் வழங்கப் பட்டது.

மேலும் வீராம்பட்டினம் அரசுப் பள்ளிகளில் படிக்கும் 850 மாணவர்களுக்கு திருக்குறள், ஆங்கில இலக்கணம், இந்திய, உலக வரை படம், புத்தகப்பை, மற்றும் எழுது பொருட்கள் வழங்கப்பட்டன. விழாவிற்கு கவுரவத் தலைவர் பெரியாண்டி வரவேற்றார். நிறுவனர் சரவணன், பூபாலன் நோக்கவுரையாற்றினார். சுப்ரமணியன் ஊக்க உரையாற்றினார். அரியாங்குப்பம் எம்.எல்.ஏ., ஜெயமூர்த்தி அறக்கட்டளையைத் துவக்கி வைத்து ஊக்கத் தொகை மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கிப் பேசினார்.

சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன புதுச்சேரி பொறுப்பாளர் ராஜ்மோகன், ஆரோவில் சமூக ஆர்வலர் ஜெயந்தா கங்குலி, இங்கிலாந்திலிருந்து வருகை புரிந்த அலெக்சாண்டர் மொபட், பள்ளி தலைமையாசிரியர் பழனி ஆகியோர் உதவித் தொகை மற்றும் பரிசுகள் வழங்கிப் பேசினர். நிகழ்ச்சியில் கடற்கரை மீனவ பஞ்சாயத்தார்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். அறக்கட்டளை மேலாளர் சேதுபதி நன்றி கூறினார்.

**DAILY THANDHI**
Dated: 31.08.2005

## அறக்கட்டளை தொடக்க விழா

### மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன

புதுச்சேரி, ஆக.31–

திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை தொடக்க விழா மற்றும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி நல உதவி வழங்கும் விழாவும் வீராம்பட்டினம் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் நோக்கமாக 900 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இவற்றில் புதுவையில் உள்ள பதினைந்து கடற்கரையோர கிராமங்களில் இருந்தும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊக்கத் தொகை ரூ. ஆயிரம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியின் அறக்கட்டளையின் கவுரவ தலைவர் பெரியாண்டி வரவேற்புரை ஆற்றினார். அறக்கட்டளையின் நிறுவனர் சரவணன் பூபாலன் நோக்கவுரை ஆற்றினர். அரியாங்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெயமூர்த்தி திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளையை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றி, ஊக்கத்தொகை மற்றும் பரிசு பொருட்கள் வழங்கினார்.

மேலும் இவ்விழாவில் புதுவையில் உள்ள கடற்கரை மீனவ பஞ்சாயத்தார்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை மேலாளரான சேதுபதி நன்றி கூறினார்.

**MAALAI MALAR**
Dated: 30.08.2005

## மாணவர்களுக்கு கல்வி நல உதவி



திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை தொடக்கவிழா மற்றும் மாணவ-மாணவிகளுக்கு கல்வி நல உதவி வழங்கும் விழா வீராம்பட்டினம் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

அறக்கட்டளையின் கவுரவ் தலைவர் முனைவர் பெரியாண்டி வரவேற்றார். அறக்கட்டளையின் நிறுவனர் சரவணன் பூபாலன் நோக்கவுரை ஆற்றினார். சுப்பிரமணியம், மாணவர்களை ஊக்கப்படுத்தி உரை ஆற்றினார். அரியாங்குப்பம் தொகுதி எம்.எல்.ஏ. ஜெயமூர்த்தி, திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளையைத் தொடங்கி வைத்து 900 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பரிசு பொருட்கள் வழங்கினார்.